[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House the following message, dated the 13th August 1956, received from the Governor of Madras :—

"I have received with great satisfaction your resolution of thanks for the address with which I opened the present Session of the Legislature."

III.—STATEMENT UNDER RULE 40 *RE* SUPPLY OF WATER FROM PAPANASAM DAM TO WET LANDS IN TIRUNELVELI DISTRICT.

MR. SPEAKER : I have to announce also that I have received notice from hon. Member Sri R. S. Arumugam calling attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, viz., the supply of water from the Papanasam Dam to the wet lands in Tirunelveli district. Sri Arumugam may now explain his point.

10-24 a.m. *SRI R. S. ARUMUGAM : கனம் சபாநாயகர் அவர்களே, தாம்பிரபரணி நதியில்லாவிட்டால் திருநெல்வேலி ஜில்லா நிரந்தர பஞ்ச பிரதேசமாகயிருக்குமென்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயமே. கடந்த சில வருஷங்களாகவே திருநெல்வேலி ஜில்லாவில் நல்ல மழை பெய்யவில்லை. இருந்தபோதிலும், தாம்பிரபரணி நதிபாசனத்தினால் விளைகிற நெல்லைக்கொண்டு, மற்ற பகுதிகளுக்கும் ஈடு செய்யப்பட்டு வருகிறது. தாம்பிரபாணி நதிப்பாசனத்தில் 40 ஆயிரம் எக்கர் நஞ்செய் நிலங்களில் சாகுபடியாகி இருக்கின்றன. இந்த 40 ஆயிரம் எக்கரில் உள்ள பயிர்களும், தண்ணீர் இல்லாத காரணத்தினால் கருக ஆரம்பிக்கின்றன. இப்போது பயிர்கள் பச்சை பசேலென்று கண்ணிற்கு குளுமையாக காட்சி அளிக்கிறதென்றாலும், தீய்ந்து போனால் எவ்வளவு நஷ்டமேற்படும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திப் பார்க்கவேண்டும். சொந்த சாகுபடி செய்தவர்கள் மாத்திரமல்லாமல், கட்டுக் குத்தகைக்கு சாகுபடி செய்தவர்களும் எவ்வளவு கடன் தொல்லைக்கு உள்ளாவார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்திருக்கிறது. தாம்பிரபாணி நதியில் பாபநாசத்தில் அணைக்கட்டி இருக்கிறார்கள். அது முற்றிலும் மின்சாரத்திற்காக கட்டப்பட்ட அணை என்பது நாம் அறிந்த விஷயமே. இருந்தபோதிலும் கூட, தற்போது திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது போன்ற ஒரு கஷ்டமான நிலமை ஏற்படும்போது அணையிலிருந்து சாகுபடிக்கு தண்ணீரை திறந்துவிட வேண்டியது மிகவும் அவசியமாகிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதன் காரணமாக ஏதாவது ஒரு பகுதியில் சினிமா நடத்தமுடியாமல் போய்விட்டாலோ அல்லது தெருக்களில் மின்சார விளக்கு எரியாமல் போய்விட்டாலோ, யாதொரு நஷ்டமும் வந்துவிடாது. இப்படிப்பட்ட கஷ்டமான நிலை ஏற்படும்போது சர்க்கார், இரண்டு வருஷங்களுக்கு முன்னதாக அணைக்கட்டிலிருந்து **17** அடி வரும் வரை தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறார்கள். இப்போது ஏற்பட்டிருக்கிற ஒரு கஷ்டமான நிலைமைமாதிரி, இதற்கு முன்பு எப்போதும் ஏற்பட்டது கிடையாது. நமது அமைச்சர் கனம் ராஜா அவர்கள் தயாள எண்ணம் படைத்தவர்கள் என்பது எங்களுக்குத்தெரியும். ஆகவே, இதையெல்லாம் எண்ணிப்பார்த்து, போதுமான அளவு தண்ணீரை திறந்துவிட்டு வாடுகிற பயிரையும், அந்த பகுதி மக்களையும் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளத்தான் இந்த பிரச்னையை கிளப்பினேன் என்பதை தெரிவித்து என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.